புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்: 04/TD/DTC/PA/2013/17 புதுச்சேரி, தேதி: 25.10.2013

செய்திக் குறிப்பு

**அனைத்து வாகனங்களுக்கும் உயர் பாதுகாப்பு பதிவெண்பலகை பொருத்துவது அவசியம்**

மோட்டார் வாகனங்களுக்கான மத்திய மோட்டார் வாகன விதி எண்.50ன்படி அனைத்து வாகனங்களுக்கும் உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை (High Security Registration Plates (H.S.R.P.) பொருத்துதல் வேண்டும். இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்குகளின் காரணமாக அனைத்து வாகனங்களுக்கும் H.S.R.P. பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் கடந்த 11.04.2012 முதல் வாகனங்களுக்கு H.S.R.P. பொருத்துவது நடைமுறையில் உள்ளது. இது வரை 1,44,041 வாகனங்களுக்கு உயர் பாதுகாப்பு பதிவெண் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன (புதிய வாகனங்கள் 61,738, பழைய வாகனங்கள் 82,303). கடந்த 30.04.2013 முதல் அனைத்து புதிய வாகனங்களும் போக்குவரத்துத் துறை வளாகத்தில் உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை பொருத்தப்பட்ட பின்னரே வாகன உரிமையாளர்களிடம் வழங்கப்படுகிறது. பழைய வாகனங்களுக்கும் கால தாமதமின்றி நம்பர் பிளேட்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை பொருத்துவதற்கான விண்ணப்பப்படிவம், அலுவலக கவுண்டரில் இலவசமாக வழங்கப்படுகிறது. விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து அதனுடன் R.C.புத்தக நகல், இன்சூரன்ஸ் நகல், வாகன உரிமையாளரின் அடையாள சான்றிதழ், வாகன உரிமையாளரின் முகவரி சான்றிதழ், வாகனத்தின் சேசிஸ் நம்பரின் பென்சில் பிரிண்ட் ஆகிய ஆவணங்களை இணைத்து அதே கவுண்டரில் சமர்ப்பிக்கவேண்டும். பரிசீலனைக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து விண்ணப்பங்களுக்கும் அதற்குறிய கட்டணத்தை அன்றே செலுத்த வேண்டும். கட்டணம் செலுத்திய மறுநாள் தமது வாகனங்களை போக்குவரத்துத் துறை

வளாகத்திற்குக் கொண்டு வந்து H.S.R.P. நம்பர் பிளேட் பொருத்திக் கொள்ளலாம். HSRP பொருத்துவதற்கான கட்டண விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| இரு சக்கர வாகனங்கள் | : | ரூ.111/- |
| மூன்று சக்கர வாகனங்கள் | : | ரூ.133/- |
| இலகுரக நான்கு சக்கர வாகனங்கள் | : | ரூ.326/- |
| கனரக நான்கு சக்கர வாகனங்கள் | : | ரூ.364/- |

அனைத்து வகை பழைய வாகனங்களுக்கும் 28.10.2013 முதல் மேட்டுப்பாளையம் போக்குவரத்துத் துறை கிளை அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களிலும் விண்ணப்பம் செய்து கட்டணம் செலுத்தி HSRP நம்பர் பிளேட்கள் பொருத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 100அடி சாலையில் உள்ள போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் அனைத்து புதிய வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கும் HSRP நம்பர் பிளேட் பொருத்துவது தொடரும்.

கடந்த 30.04.2013க்கு முன்னர் பதிவு பெற்ற வாகன உரிமையாளர்கள் சிலர் தயார் செய்யப்பட்ட HSRP நம்பர் பிளேட்டை இன்னும் பொருத்திக் கொள்ளாத நிலையும் உள்ளது. இவர்களின் வசதிக்காக அனைத்து சனிக்கிழமைகளிலும் தமது வானங்களை கொண்டு வந்து காலை 9மணி முதல் மாலை 5 மணி வரை 100அடி சாலையில் உள்ள போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் தமது வாகனங்களை கொண்டுவந்து HSRP நம்பர் பிளேட்களை பொருத்திக் கொள்ளலாம்.

மோட்டார் வாகனச் சட்டப்படி அனைத்து வாகனங்களுக்கும் HSRP நம்பர் பிளேட் பொருத்துவது இன்றியமையாதது. உச்ச நீதிமன்றமும் இதனை தொடர்ந்து வலியுறுத்தி வருவதால் அனைத்து வாகன உரிமையாளர்களும் தமது வாகனங்களில் உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை பொருத்திக் கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

S. [signature]

எஸ்.டி.சுந்தரேசன்
போக்குவரத்து ஆணையர்